பொருள் எண்.1

கன்னியாகுமரி மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதம் ந.க.எண்.915/ஆ2/2017 நாள் 19.06.2017 –ன் படி இந்நகராட்சிக்குட்பட்ட குளச்சல், கொட்டில்பாடு பகுதிகளிலுள்ள மீனவர் (FCSNFSRS) மற்றும் மீனவ மகளிர் சங்கத்தைச் சேர்ந்த பயனாளிகளின் பட்டியல் 2017–18 மீன்வளத்துறையினரால் தயார் செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. இப்பட்டியலில் உள்ள நபர்களின் பெயர்கள் தேசிய கடல் மீனவர் மற்றும் தமிழ்நாடு மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் (2017–18) கீழ் பயன்பெறும் பொருட்டு ஏற்கனவே 2015–ல் தீர்மானம் நிறைவேற்றி தந்தது போல் தற்பொழுதும் அதேபோல் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கிறார்கள் என தீர்மானம் நிறைவேற்றித் தரும்படி கேட்டு கொண்டுள்ளார்கள்.

விவரம் பின்வருமாறு

1. 2017–18 –ம் ஆண்டு தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத்திட்டத்தில் புதிதாக விண்ணப்பித்துள்ள கொட்டில்பாடு FCS NFSRS மீனவர் சங்கத்தை சார்ந்த 43 உறுப்பினர்கள் இத்திட்டதின் கீழ் பயன்பெற ஏதுவாக வறுமைக் கோட்டின் கீழ் உள்ளனர்.

2. 2017–18–ம் ஆண்டு தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தில் புதிதாக விண்ணபத்துள்ள குளச்சல் கொட்டில்பாடு FCS TNFWSRS மீனவர் சங்கத்தை சார்ந்த 72 உறுப்பினர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெற ஏதுவாக வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளனர்.

3. 2017–18–ம் ஆண்டு தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத்திட்டத்தில் புதிதாக விண்ணப்பித்துள்ள குளச்சல் FWCS மீனவர் சங்கத்தை சார்ந்த 73 உறுப்பினர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற ஏதுவாக வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளனர்.

அ.கு1. மன்றம் அனுமதி வழஙகலாம்

2. மேற்காணும் நபர்கள் உள்ளடக்கிய பட்டியலானது, தேசிய கடல் மீனவர் மற்றும் தமிழ்நாடு மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரண திட்டத்திற்கு மட்டும் பொருந்தும்.

ந.க.எண்.சஅ/2806/14

**தீர்மானம் எண்.1742 அஙகீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.2

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு காம்பெக்டர் வாகனம் எண்.TN-75-6-2565-க்கான தகுதி சான்று புதுப்பிப்பதற்கான கீழ்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு உத்தேச செலவுத் தொகை ரூ.56000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. டிஙகரிங ஒர்க்ஸ்
2. கிளட்ச் அசம்பிளி மாற்றுதல்
3. ஹைட்ராலிக்ஸ் துரு பிடித்த இரும்பு குழாய் மாற்றுதல்
4. ஹைட்ராலிக் ஆயில் 20 லிட்டர் விடுதல்
5. எலக்ட்ரீக்கல் பழுது பார்த்தல்‘
6. முழு சர்வீஸ் மற்றும் கிரீஸ் அடித்தல்
7. முழு பெயிண்டிங மற்றும் சில பணிகள்.

ந.க.எண்.1841/2013/எச்1

**தீர்மானம் எண்.1743 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

இந்நகராட்சிக்குட்பட்ட அம்பேத்கார் தினசரி சந்தையில் அமைந்துள்ள கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை எண்.32 வரிவிதிப்பு எண்.2011002 பொது ஏலத்தின் மூலம் கடந்த 01.08.2011 முதல் வாடகைக்கு விடப்பட்டது. மேற்படி கடையின் உரிமம் 31.07.2017—ல் முடிவடைந்துள்ளதால் 01.08.2017 முதல் 31.07.2020 வரை மேலும் மூன்றாண்டுகளுக்கு உரிமம் நீட்டிப்பு செய்யவும், வாடகை தொகையில் 15% வரி உயர்வு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | கடை எண் | வரிவிதிப்பு எண் | உரிமைதாரர் பெயர் | தற்போதைய வாடகை | 15% வரி உயர்வு செய்த வாடகை | உயர்வு செய்யப்பட்ட பின்னர் வாடகை தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 32 | 2011002 | ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ் | 1179/— | 117/— | 1356/— |

ந.க.எண்.2035/2015/அ1

**தீர்மானம் எண்.1744 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

இந்நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு ஜுன் 2017 முதல் செப்டம்பர் 2017 முடிய நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யப்பட்ட தொகையும், உணவுகள் விற்பனை செய்யப்பட்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வருடம்/மாதம் | வரவு விபரம் ரூ | செலவு விபரம் ரூ |
|---|---|---|
| ஜுன் 2017 | 1,03,600 | 2,83,447 |
| ஜுலை 2017 | 1,07,600 | 2,76,355 |
| ஆகஸ்ட் 2017 | 1,06,000 | 2,62,350 |
| செப்டம்பர் 2017 | 1,01,600 | 2,66,055 |

ந.க.எண்.1117/2015/அ1

**தீர்மானம் எண்.1745 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு பீச் சந்திப்பு பேருந்து நிறுத்தம் அருகில் நின்றிருந்த மரம் வேரோடு சாய்ந்து விழுந்ததினால் பொது மக்களுக்கும், பள்ளி குழந்தைகளுக்கும், அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்துதிற்கு செல்லும் நோயாளிகளுக்கும் இடையூறாக இருந்ததினால் ஆணையர்

அனுமதி பெற்று மின் அறுவை இயந்திரம் மூலம் வெட்டி அப்புறப்படுத்தப்பட்ட வகையில் ரூ.1500/– இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1584/2017/எச்1

**தீர்மானம் எண்.1746 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் விளம்பரப் பணிகளை திருநெல்வேலி மண்டலத்திலுள்ள 20 நகராட்சிகளிலும் களப்பணியாளர்கள் தனியார் வழி நியமனம் செய்து பணிகளை மேற்கொள்ள தகுதி வாய்ந்த நிறுவனத்தினை தேர்வு செய்து ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் செய்யப்பட்டு நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கான தொகையினை அனைத்து நகராட்சிகளுக்கு சரிசம விகிதத்திலான இந்நகராட்சியின் பஙகுத் தொகை ரூ.7791/– அருப்புக்கோட்டை நகராட்சி ஆணையருக்கு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2042/2015/எச்1

**தீர்மானம் எண்.1747 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அஙகஙகே தேஙகியுள்ள குப்பைகளை பொது சுகாதார நலன் கருதி அகற்றும் பணியை செய்வதற்கு மூன்று உள்ளூர் விலைப்புள்ளிகள் நேரிடையாக பெறப்பட்டது. மேற்படி விலைப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

| | | விலைப்புள்ளி விவரம் டிப்பர் மற்றும் JCB ஒரு மணி நேரத்திற்கு |
|---|---|---|
| 1 | ராஜன் ஏஜென்சீஸ்<br>கருஙகல் | 350 + 750 |
| 2 | ஜோசப் கிருபை ஏஜென்சீஸ்<br>குளச்சல் | 300 + 700 |
| 3 | ஷாஜி ஏஜென்சீஸ்<br>ரீத்தாபுரம் | 400 + 750 |

மேற்படி பெறப்பட்ட மூன்று உள்ளூர் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஜோசப் கிருபை ஏஜென்சியின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழஙகப்பட்டதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.எச்1/998/2017

**தீர்மானம் எண்.1748 அஙகீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.1

இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு, சிங்காரவேலர் காலனி மற்றும் பர்னட்டிவிளை பகுதிகளில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் உள்ள ஏணிப்படிகள் துருப்பிடித்து மிகவும் மோசமான நிலையில் உள்ளதால், ஏணிப் படிகள் வழியாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளின் மேற்பகுதிக்கு சென்று குளோரின் கலப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. மேலும் தற்போது டெங்கு காய்ச்சல் பரவி வரும் சூழ்நிலையில், குடிநீரில் குளோரின் கலக்க வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டு, மேற்படி மூன்று மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலும் ஏணி படிகள் அமைப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.3,50,000/—க்கும், மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் வழஙகல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1780/2017/இ2

**தீர்மானம் எண்.1749 அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.2

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணியாளர்களின் வேலைக்கு தேவையான தளவாட பொருட்கள் குறைவாக இருப்பதினால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி கீழ்காணும் பொருட்கள் வாங்க உத்தேச செலவு தொகை ரூ.1,00,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

பொருட்கள் விபரம்

| | | |
|---|---|---|
| 1. | கடப்பாறை | –3 |
| 2. | வெட்டுகத்தி | –4 |
| 3. | மண்வெட்டி | –16 |
| 4. | சிறுநீள மண்வெட்டி | –10 (ஓடை தூர் எடுக்க) |
| 5. | சட்டி | –20 |
| 6. | குப்பை அள்ளும் தட்டு | –50 |
| 7. | பெரிய கூடை | –30 |
| 8. | துவாரமிட்ட பக்கெட் | –4 (பொடி தட்ட) |
| 9. | பெரிய மாறு | –30 |
| 10. | கைமாறு | –25 |
| 11. | கையுறை | –50 |
| 12. | முக கவசம் | – 50 |
| 13. | பிக்காஸ் | –4 |

ந.க.எண்.1388/2009/எச்1

**தீர்மானம் எண்.1750 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

குளச்சல் நகராட்சி பகுதியில் உள்ள தெருவோர வியாபாரிகள் கணக்கெடுத்தல் மற்றும் அடையாள அட்டைகள் வழங்கும் பணிக்கு இந்நகர் மன்றத்தீர்மானம் எண்.1680 நாள் : 22.06.2017 –ன் படி Sysmedac, Pallikaranai Chennai என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழஙகப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பணிகள் செய்த வகையில் ரூ–5532/– வழஙக கேட்டு மேற்படி நிறுவனத்தில் இருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி தொகை ரூ.5532/–னை Sysmedac, சென்னை நிறுவனத்திற்கு வழஙகுவதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

ந.க.எண்.5156/2009 /TPI

**தீர்மானம் எண்.1751 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

இந்நகராட்சிக்கு சொந்தமான நவீன மீன் சந்தையின் தரைதள கடை எண்.3,4,5,6,7 மற்றும் 8–ல் வியாபார வசதிக்காக கடையின் மேற்கு பகுதி சுவரினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு, வாசல் மற்றும் Rolling shutter அமைக்கும் பணியினை அவர்கள் தம் சொந்த செலவில் மேற்கொள்வதற்கு அனுமதி வழஙகுவதற்கும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ( கடை ஒன்றுக்கு) ரூ. 8500/– க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ1/1790/2016

**தீர்மானம் எண்.1752 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

இந்நகராட்சியில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் உள்ள மின்மோட்டார்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதால் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் குறைவான தண்ணீர் ஊந்தப்படுகிறது. எனவே மக்களின் தேவைக்கேற்ப தண்ணீர் விநியோகம் செய்ய முடியாத நிலை உருவாகிறது. எனவே வறட்சியை சமாளிக்கும் பொருட்டு புதியதாக 5 ஆழ்துளை கிணறுகளுக்கு மின்மோட்டார்கள், Panel Board கள் மற்றும் Cable Wire தேவைப்படுகிறது. மேலும் வால்வுகளை தினந்தோறும் இயக்குவதால் வால்வுகளை தினந்தோறும் இயக்குவதால் வால்வுகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே, தற்போது புதியதாக 6 '' Slice Valve – 2 எண்ணம், 5 '' Slice Valve – 3 எண்ணம், 4 '' Slice Valve – 2 எண்ணம், 3 '' Slice Valve – எண்ணமும் தேவைப்படுகிறது. எனவே மேற்கண்ட அனைத்தும் புதியதாக வாஙகிட ரூ.6,70,000/–க்கு உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ2/1797/2017

**தீர்மானம் எண்.1753 அஙகீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.6

இந்நகராட்சிக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படும் கீழ்க்கண்ட இடங்களில் உள்ள ஆழ்துளை கிணறகளுக்கு மின் விநியோகம் செய்யப்படும் பம்பு ரூம்களில் உள்ள Wiring வேலைகள் Main Switch, Fuse Carrier ஆகியவை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் பணியாளர்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலையில் உள்ளது.

1. பாலத்தன்கரை
2. வெள்ளிப்பிள்ளையார்கோவில்
3. சீம்பிளிவிளை
4. பர்நட்டிவிளை
5 K.S.S.S

எனவே மேற்கண்ட பழுதுகளை சரி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1,10,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ2/1796/2017

**தீர்மானம் எண்.1754 அங்கீகரிக்கப்பட்டது.**